Register as a N paper eylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமான,

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈச னெந்தை யிணையடி நீழலே

புத். ருரு] யாழ்ப்பாணம்:—சுபானுவஸு புரட்டாதிமீ சஉ (1943 செப்டம்பர்மீ 20 திங்கட்கிழமை) [இல. சசு

## கோர மோட்டார் விபத்து

கந்தர் தம்பிப்பிள்ளையின் புதல்வியாகிய தேவாம்பிகை என்னும் 5 வயதுக் குழந்தை ஏனைய குழந்தைகளோடு பள்ளிக்கூடத்துக்குச் செல்லும்போது கரவெட்டி வடக்கைச் சேர்ந்த T. மாணிக்கம் என்பவரால் செலுத்தப்பட்ட Z 5637 இலக்க பஸ்ஸால் மோதப்பட்டு உயிர்நீத்தாள். இவள் மூர்ச்சையாகிய நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டாள். அங்கு உயிர்நீத்தாள்.

இவளது மரணத்தைப்பற்றி விசாரணை நடத்திய திரு. V. மாணிக்கவாசகர் விசாரணையின் பின் பஸ் சாரதிமீது குற்றமில்லையெனத் தீர்ப்புக் கூறினர்.

## மின்சாரச் சுப்பிறின் டெண்ட் மீண்டும் வேலையாரம்பித்தார்

யாழ்ப்பாணப் பட்டினசபை மின்சாரச் சுப்பிறிண்டெண்ட் திரு. ந. நாகேந்திரம் வேலையினின்று விலகவேண்டுமென்று பட்டின சபைத் தலைவர் திரு. K. ஐயாத்துரை அவருக்கு அனுப்பியுள்ள அறிவித்தலையும் வேலையினின்று தற்காலிகமாக விலகவேண்டுமென்று அவருக்கு இட்ட கட்டளையையும் நீக்கிவிட, அவர் சென்ற புதன்கிழமை மறுபடியும் வழமைபோல தமது கடமையை யாற்ற வந்திருக்கின்றார்.

## மரக் கட்டைகளுக்குள் அரிசி

பொல்காவலையைச் சேர்ந்த டபிள்யூ. ஏ. இந்திரரத்ன என்னும் ஜோன்சிங்கோ 39 கொத்து அரிசியைக் குடையப்பட்ட மரக்கட்டைகளிற் கொண்டு சென்ற குற்றத்திற்காகச் சென்ற வியாழக்கிழமை கொழும்புப் பொலீஸ் கோட்டில் இரண்டு மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார். குறித்த அரிசியைப் பறிமுதல் செய்து உணவுக் கட்டுப்பாட்டதிகாரியிடம் அனுப்பும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

## பஸிபிக்கில் விமான நஷ்டங்கள்

வாஷிங்டன் செப் 16—

ஆகஸ்டு மாதம் 7-ம் திகதியன்று முண்டா விமான நிலையத்தைக் கைப்பற்றும் முன் அமெரிக்க விமானிகள் 37 நாட்களில் 358 ஜப்பானிய விமானங்களைச் சுட்டு வீழ்த்தியிருக்கின்றனரென்று அமெரிக்க கடற்படைப் பகுதி இன்று அறிவிக்கிறது.

அதேகாலத்தில் அமெரிக்கா 259 போர் விமானங்கள் 60 வெடிகுண்டு விமானங்கள் 23 பருந்துப் பாய்ச்சல் விமானங்களை 16 கடல் விமானங்கள் ஆகியவற்றை இழந்திருக்கிறது.

## வடபகுதி நீதிபதிக்குப் பாராட்டு

### "மிகச்சிறந்த யாழ்ப்பாண வழக்கறிஞர்களில் ஒருவர்"

யாழ்ப்பாணம், செப் 15—

அண்மையில் ஓய்வு பெற்றிருக்கும் யாழ்ப்பாண டிஸ்திறிக் நீதிபதி மிஸ்றர் ஜி. ஸி. தம்பையாவுக்கு நேற்று டிஸ்திறிக் கோட்டில் வழக்கறிஞர்கள் பிரிவுபசாரமளித்தனர். அப்பொழுது முடிக்குரிய வழக்கறிஞர் திரு. வ. வி. குலசிங்கம் பழைய நீதிபதியின் சட்ட அறிவைப் பாராட்டிப் பேசினர்.

திரு. தம்பையா பதிலளிக்கும்போது நீதிசெலுத்தும் விஷயத்தில் வழக்கறிஞர்சபை தமக்களித்த ஆதரவுக்கும் ஒத்துழைப்புக்கும் நன்றி தெரிவித்தார்.

பின்னர் வழக்கறிஞர் சபை யாழ்ப்பாண நகரமண்டபத்தில் நீதிபதிக்குப் பிரிவுபசாரமளித்தது. அப்பொழுது தலைமைவகித்த அதவக்காத் திரு. குலசிங்கம் அவர்கள் பேசும்போது, திரு. தம்பையா மிகச்சிறந்து விளங்கிய யாழ்ப்பாண நியாயதுரந்தரர்களில் ஒருவரென்று குறிப்பிட்டார்.

## யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை

### நிருவாகசபைக் கூட்டம்

நிகழும் சுபானுவருஷ புரட்டாதி மீ 3௳ (19-9.43) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் ஷை சபை நிலையத்தில் கூடிய நிருவாகசபைக்கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள்:-

பிரேரித்தவர் திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள், ஆமோதித்தவர் திரு. சு. அண்ணாமலை அவர்கள்.

சைவசமயம், கல்வி, கமத்தொழில், அரசியல் முதலிய துறைகளில் நமது நாட்டுக்கு அருந்தொண்டு ஆற்றிவந்தவரும், எங்கள் சபையின் உபதலைவர்களுள் ஒருவருமாகிய ஸ்ரீமான். கா. அருளம்பலம் J. P. அவர்களது பிரிவைக் குறித்து இச்சபை பெரிதும் அநுதாபப்படுகின்றது.

தமிழ்நாட்டில் சைவத்தொண்டும், தமிழ்த்தொண்டும், அரசியல் தொண்டும் ஆற்றிவருகின்ற சைவத்திருவாளர் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்களது 60ம் ஆண்டு விழாவில் எங்கள் சபை இன்புற, அவருக்கு நீண்ட ஆயுளும், உடனலமும், கீர்த்தியும் உண்டாக இறைவன் திருவருள் புரிய வேண்டுமென்று இச்சபை விரும்புகின்றது.

## இந்துக்கல்லூரி மைதானத்தில் படக்காட்சி

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிச் சரித்திர, குடியியல் அறிவுச் சங்கத்தின் ஆதரவில், அரசாங்கச் செய்தி இலாகாவின் சுற்றித் திரிந்து படங்காட்டும் பகுதியாரால் இம்மாதம் 21ந் திகதி மாலை 7 மணியளவில், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் இனிமையாக ஒரு படக்காட்சி காட்டப்படுமென அறிகின்றோம்.

## ஸலேர்ணு யுத்தத்தின் நிலைமை மாறிவிட்டது

### ஜெர்மன்படைகள் துரத்திச் செல்லப் படுகின்றன

லண்டன், செப் 16

ராய்ட்டரின் விசேஷநிருபரொருவர் பின்வருமாறு எழுதுகிறார்:-

ஸலேர்ணு யுத்தத்தில் 5வது சேனை வெற்றி பெற்றுவிட்டது. எட்டாவது சேனை துரிதமாக வடக்குநோக்கி முன்னேறிக்கொண்டிருப்பதனால் இப்போது ஜெர்மானியர் தான் ஆபத்தில் சிக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

நேசதேசப் படைகளிரண்டும் ஒன்றுசேருவதற்குமுன் ஜெர்மானியர் ஏற்கெனவே வெளியேறத் தொடங்கியிருப்பரென்று ஒரு லண்டன் செய்தி கூறுகிறது.

கடந்த 48மணி நேரமாகத் தனக்குக் கிடைத்த புதிய படைகளின் பலத்தைக் கொண்டு ஐந்தாவது சேனை தற்காப்பு யுத்தம் செய்வதை விட்டு இன்று அதிகாலை வலுத்தாக்குதலை ஆரம்பித்துவிட்டது. இதன் பயனாக அல்டாவில்லாவுக்கு வடக்கே ஜெர்மானியர் மூன்று மைல் தூரம் பின்தள்ளப்பட்டனர் என்று வட ஆபிரிக்காவிலுள்ள நேசதேச ராணுவ தலைமைக் காரியாலயத்திலிருந்து கிடைத்த செய்தியொன்று கூறுகிறது.

ஸலேர்ணே குடாவின் தென்பகுதியில கொலோர் நதிக்கும் ஸெலேக்கும் இடையில முன்னேற இருந்த ஜெர்மானியர் அழிக்கப்பட்டனர்.

கடந்த நான்கு நாட்களாக ஜெர்மானியர் நடத்திய எதிர்த் தாக்குதலின்போது தாங்கள் இழந்த பகுதியில பாதியை பிரிட்டிஷ் அமெரிக்க வீரர்கள் திரும்பக் கைப்பற்றிவிட்டனர். அல்டாவில்லாவுக்கு வடமேற்கே நேசதேசப் படைகள் எட்டு மைல்தூரம் முன்னேறியிருக்கின்றன.

லெப்டினென்ட் ஜெனரல் மார்க்கிளார் இன்று விடுத்த உத்தரவினால் அமெரிக்கக் காலாட்படைகள் உற்சாகமடைந்து பீரங்கிகள் டாங்கிகள் ஆகியவற்றின் உதவியுடன் ஒரு புதிய வலுத்தாக்குதலை ஆரம்பித்தன.

## யாழ்ப்பாணத்துக்குப் புதிய டிஸ்திறிக் நீதிபதி

யாழ்ப்பாணப் பகுதியின் புதிய டிஸ்திறிக் நீதிபதி மிஸ்றர். ஜேம்ஸ் ஜோசெப் பதவியேற்ற பொழுது வழக்கறிஞர் திரு. வ. ஆர். சுப்பிரமணியம் வழக்கறிஞர் சபையின் சார்பாக அவரை வரவேற்றார்.

மிஸ்றர். ஜோசெப் அப்பொழுது பதிலளிக்கையில் தமது நன்றியைத் தெரிவித்தார்.

## சர்வகலாசாலைத் தமிழ்ச் சங்க விழா

இலங்கைச் சர்வகலாசாலைத் தமிழ்ச் சங்கத்தின் 17-வது ஆண்டு விழா சென்றவியாழனன்று பிற்பகல் ஜோர்ஜ் மன்னர் மண்டபத்தில் அதி விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அன்றிரவு ஒரு நாடகம் நடிக்கப்பட்டது.

## 5-வது, 8-வது சேனைகள் சந்திப்பு

### மொண்ட்கோர்வினு நகரை நேசதேசப் படைகள் ஸ்வீகரித்தன

லண்டன் செப் 17—

அமெரிக்க ரேடியோ விமர்சகர் அல்ஜியேர்ஸ் ரேடியோவில் பேசுகையில் ஸலேர்ணே பால முகப்புக்குத் தெற்கே சில மைல தூரத்தில் நேசதேச ஐந்தாவது சேனையும் எட்டாவது சேனையும் ஒன்றையொன்று சந்தித்து விட்டன வென்று அவர் கூறினர்.

ஸலேர்ணேவுக்கு வடகிழக்கில் 12 மைல தூரத்திலுள்ள மொண்ட்கோர்வினே பிரிட்டிஷ் அமெரிக்கப் படைகளால ஸ்வீகரிக்கப் பட்டதென்றும் அவர் தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில் ஐந்தாவது சேனை தெற்கில் முன்னேறி வல்லோ என்னுமிடத்திற்குச் சமீபத்தில் எட்டாவது சேனையைச் சந்தித்ததென்று கூறினர்.

### மீண்டும் நேசதேச வலுத் தாக்குதல்

அல்ஜியேர்ஸ் (ஐக்கியதேச) ரேடியோவால் இன்று ஒலிபரப்பப்பட்ட வட ஆபிரிக்க அறிக்கை கூறுவதாவது: ஐந்தாவது சேனையின் அரங்கத்தில ஒருவார உக்கிர யுத்தத்தின் இறுதியில் நமது பால முகப்பு ஸ்திரமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. நாம் முன்னேறியிருக்கும் பகுதியைக் குறைப்பதற்குச் சத்துரு செய்த முயற்சிகள் மிகக் குறைந்து விட்டன. நமது படைகள் மீண்டும் வலுவில் தாக்க ஆரம்பித்து விட்டன. நேற்றுச் சத்துருவின் மூன்று எதிர்த் தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டன. யுத்தக் கைதிகளும் பிடிக்கப்பட்டனர். சத்துரு முன்பு நடத்திய தாக்குதல்களின் போது அவனது துருப்புகள் முன்னேறியிருந்த பிரதேசம குறைக்கப்பட்டு விட்டது.

## மற்றும் 6 இத்தாலிய நீர்மூழ்கிகள் மோல்டா சேர்ந்தன

லண்டன் செப் 17—

மற்றும் ஆறு இத்தாலியக் கப்பல்கள் இன்று மோல்டாவுக்கு வந்து சேருகின்றன. இத்துடன் மொத்தம் 16 இத்தாலிய நீர்மூழ்கிகள் மோல்டாவை அடைந்திருக்கின்றன.

## சத்துருவாகக் கருதப் படும் சங்கானைவாசி

இப்போது மலாயாவிற் கொட்டாபருவில் வசிப்பவராக நம்பப்படும் ஆறுமுகம் வைத்திலிங்கம் என்பவர் பாதுகாப்புச் சட்ட விதிகளின்கீழ் ஒரு சத்துருவாகக் கருதப்படுகிறார்.

எனவே, சங்கானையில் அவருக்குச் சொந்தமானதாக இருக்கும் ஒரு சிறிய காணி சத்துரு சொத்துப் பாதுகாவலரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சுபானுவரு
புரட்டாதிமீ சஉ திங்கட்கிழமை

## இப்போதைய யுத்தநிலை

பிருத்தானிய அமெரிக்க படைகள் இத்தலி நாட்டிற்குப் படையெடுத்துச் சென்று சமர்செய்யத் தொடங்கியநாள் முதல் அயிரோப்பிய யுத்தம் பரப்பிலும் கோரத்தன்மையிலும் அதிகப்பட்டு வருகிறதென அறியக்கிடக்கின்றது. இத்தலி நாட்டிலே இராச்சியம் இரண்டுபட்டுவிட உள்நாட்டிற் பெரும் பிணக்குகளும் கலகமும் மாறுதல்களும் நேர்தலாயின. இத்தலிய அரச கட்சியினராற் சிறைப்படுத்தியிருந்த முஸோலினியையும் முஸோலினியைச் சேர்ந்த பிரதானிகள் படைத்தலைவர்களையும் ஜர்மனியர் முஸோலினியின் கட்சியினருடன் சேர்ந்து சிறைமீட்டுத் தம்வசம் வைத்துக்கொண்டனர். முஸோலினிக்கு ஜர்மனியர் பழைய அதிகாரத்தை யுகவிப் படைத்துணையுஞ் செய்யலாயினர்; இதனால் முஸோலினி கட்சியாரனைவரும் ஜர்மனியருடன் சேர, இத்தலிய அரசரும் சேனுபதி படக்கிளியோவும் பிருத்தானிய அமெரிக்கர்களாகிய ஐக்கிய ராச்சியத்தாருடன் சேர்ந்து கருமஞ் செய்வாராயினர். ஜர்மனியர் வட இத்தாலியை அரண் செய்துகொண்டு ஐக்கிய ராச்சியத்தினரின் படையை எதிர்த்துப் பொருதனர். போதிய சைநியமும் யுத்த உபகரணங்களும் தொடக்கத்தில் இத்தலிக்கு வந்து சேராமையினால் ஐக்கிய தத்துவ ராச்சியத்தினர் படை சிறிது பின்னடைந்தது. இந்த இடையில், ஜர்மனியர் தமபக்கலான இத்தலிய சைநியத்தின் துணையுங்கொண்டு டொடிகனீஸ் தீவுகளைக் கைப்பற்றி அட்மிறல் காம்போனி யென்னும் படைத்தலைவரையும் சிறைப்பிடித்தனர்.

ஆனால், அமெரிக்க பிருத்தானிய துணைப்படை வந்து இத்தலிய யுத்தமுனையில் சேர்ந்தவுடன் ஜர்மனியபடை பின்னிடைதலாயிற்று. சில தினங்களாக இத்தலிய யுத்தமுனையிலே இருபகுதியார்க்கு மிடையிற் கோரமான போர் நடக்கின்றது. இது இவ்வாறாக முஸோலினி தாம இத்தலிய மன்னருக்கு முந்திச் செய்த இராசவசுவாசச் சததியததை நிராகரித்து தாம ஜர்மனியருடைய துணைவரென்றும் இத்தலிய மன்னருக்குப் பகைவரென்றும் மாறாக யுத்தஞ்செய்வதற்குத் தாம் ஆயத்தமென்றும் கூறியதாகச் சமாசாரம் பிறக்கின்றது.

ருஷிய யுத்தமுனையில் ஜர்மனியர் நாளுக்குநாள் பின்வாங்க ருஷியரும் தாம் முந்திப் பறிகொடுத்த ஊர்களையும் பட்டினங்களையும் பிரதான தானங்களையும் ஒன்றொன்றாக மீட்டுக் கைப்பற்றி வருகிறார்கள்.

ஜப்பானிய யுத்த விஷயமாகச் சொல்லுமிடத்தில் யப்பானியர் இந்து சீனத்திலும், தைலாந்திலும், மலாயாவிலும், பர்மாவிலும், பெருந்தொகையான சைநியங்களையும் யுத்த உபகரணங்களையும் கொண்டுவந்து நாளுக்குநாள் சேர்க்கிறார்களென்றும் இவைகள் வட சீன யுத்தமுனையிலிருந்தே தருவிக்கப்படுகின்றன வென்றும் சொல்லப்படுகிறது. மேலே சொல்லப்பட்ட இடங்களில் யப்பானியர் பல ஆகாயப் படைத் தானங்களையும் நிரு பித்திருக்கிறார்களாம். இவைகள் இப்படியாக, பிருத்தானியரும் இந்தியாவிலே ஆகாய "ஆர்மடா" எனப்படும் பாரிய ஆகாயப்படையைத் திரட்டி தாம் முனபு பறிகொடுத்த பர்மா முதலிய நாடுகளைத் தாக்கும்படி ஆயத்தஞ் செய்கிறார்கள். பிருத்தானிய ஆகாயபபடை இடையிடையே பர்மா நாட்டிற்கு மேலாகச் சென்று வெடிகுண்டுகளைப் பெய்து பகைவருக்குத் தங்களாலானமட்டும் அநர்த்தம் விளைத்து வருகின்றன. நியூகினியாவிலே யப்பானியருக்குரிய பிரதான ஸ்தானமாகவுள்ள லாஎ என்னுமிடத்தை ஐக்கியதத்துவ ராச்சியத்தினர் கைப்பற்றிவிட்டனர்; இதுவும், மற்றை யுத்தமுனையிலுள்ள பிறியன்ஸ்க், ஸலரினே என்னும் பிரதானமான தானங்களும் ஐக்கியதத்துவ ராச்சியப்படைகளினூற் பிடிக்கப்பட்டமை பகைவருக்குத் தோல்வியென்பதற்கும ஐக்கியராச்சியத்தினர்க்கு வெற்றி விரைவிலே ஆரமபமாகு மென்பதற்கும் அறிகுறியாகு மெனலாம்.

## இலங்கையை விட்டுச் செல்லும் மிஸ்றர். ஈ. ஸி. வில்லியர்ஸ்

இலங்கைத் தோட்டத் துரைமார் சங்கததின் உபதலைவரும் லஞ்சக் கொமிஷன் அறிக்கை காரணமாக அரசாங்க சபையிலிருந்து விலகிய பழைய நியமனப் பிரதிநிதியுமான மிஸ்றர். ஈ. ஸி. வில்லியர்ஸ் சமீபத்தில் இலங்கையை விட்டுச் செல்லப்போவதாகப் புசலாவைத் தோட்டத் துரைமார் சங்கக் கூட்டமொன்றில் தெரிவித்தார். இலங்கையைவிட்டு வெளியேறுவது தமக்குப் பெரிய கவலையுண்டுபண்ணுவதாகவும் தாம் அரசாங்கசபையின் தொடர்பைத் துண்டித்துக்கொள்ள நேரிட்ட விதம மனக்கவலை யளித்துள்ளதாகவும அவர் கூறினர்.

தோட்டத் துரையார் சமூகத்துக்கு மிஸ்றர். வில்லியர்ஸ் செய்துள்ள சேவைக்காக மிஸ்றர். எச். எஸ். ஹேர்ஸ்ட் நன்றி தெரிவித்தார்.

இலக்கியப் பகுதி:

# திருப்பூவண நாதருலா

[ க. கி. ந. ]

VII.

உமையம்மை திருக்கையால் வைத்து வளர்த்த திருநிழலில் வாழ்வோனும் மனத்திற் கிளைத்த பத்தி மலர அந்நாட் பானுவால் வழிபடப்பட்டோனும், அத்தி மலர அருள்செய்தோனும் (இறந்த தன்னுடைய பிதாவின் என்புகளைக் கங்காநதியிலிடுவதற்கு அவற்றை ஒரு குடத்தி லடைத்து வைத்துக் கொண்டு செல்லும் தருமஞ்ஞனென்னும் அந்தண னொருவன் இத்தலம் வந்து மணிகர்ணிகையின் கரையிலிருக்கையில், அவ்வென்புகள் தாமரை மலரும் நீலோற்பல மலருமாயின வென்பர். இதனை, இத்தல புராணத்தில், தருமஞ்ஞன் முத்திபெற்ற சருக்கத்தாலறிந்து கொள்க. அத்திமலர வென்பதற்குப் பூவாத அத்திமரம் மலர வென்பது மற்றொரு பொருள்) முத்தி மலர மலர் புட்பவனத்தானும் (இந்த வனத்தில் முத்தியென்னும் மலர் மலர்கின்றது) வலைச் சக்ர நீளத்தான் காணுத நீளத்தானும், தேவி விரும்பிக் கொட்டுகின்ற தாளத்தானும் (தாளவட்டங்கொட்டு கைப்பாணி யொப்பவொரு சப்பாணி கொட்டியருளே" என மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழில் வரும் அடிகளும் ஈண்டு நினைவு கூரத்தக்கன) ஆகிய பூவணத்தெங் கோமான்றன் பொலந்தேர் மறுகி லணைந்தது. அணைந்ததும், ஏவ(ண)ணக் கண்ணியையுடையாளாகிய அத் தெரிவையுங் கேட்டு எதிர் சென்றாள். தீவணததனுடைய தெய்வத் திருமேனிச் செஞ்சோதியும் முகமும் கையில் தாங்கிருக்கும் வீரமழுவின் காட்சியும், உய்வதத காவித் திருநீலகண்டமும், கொன்றையந்தார் மேவிப்பரிமளிக்கும மெய்ப்புயமும், தாவிப் பொழிகின்ற கருணைப புனிதநதி பொங்கி வழிகின்ற திருக்கண் மலரும், மொழியும் வேதங்களின் பண் மணக்குஞ் சீதப் பவளத் திருவாயும வெண்மணக்குங் கங்கையையுடைய விரித்த சடையும், பெண் மணக்குஞ் செம்பாதியுந் தெரிசித்தாள். அவனுறன மார்பிலிருக்கும் முலைத்தழும்பை வாழ்த்தினள். சீலவளைத் தழும்பினது சீரினைப் புகழ்ந்தாள். புகழ்ந்து, பொன்னனையாளது கோல நகக்குறியைக் கும்பிட்டாள். நீலமிடற்றோனுகிய எந்தையை நோக்கி, "நீர் வைத்தியர் (வைத்தீசுவரன்) என்றிருக்கின்றீர். இதழித் திருப்புயத்தால் வந்த விரகநோய் யாற்றுதற்கு ஒரு மருந்தறியீர். ஏதென்னே?' என்று கேட்டாள். எனது கையில் நிற்கும் தொடிவளையை நீர் கொண்டீர். கூடலிலே (வளையல்) விற்குந் தொழிலை மறந்துவிட்டீரோ? நல்ல தேன் வழியுங் கொன்றைமலரைத் தாமாட்டாதவராகிய நுமக்கு ஆரூரில் மொழியும் பெயர் (தியாகராசனென்னுந் திருநாமம்) ஏனோ? முன்னர்க் கூடலில் நீர் ஆடியவை அறுபத்துமூன்று திருவிளையாடல்களன்றோ? கூறுவீர். என் கண்ணீரூற்றை மறிக்க உபாயமறியீர், வையையாற்றை மறிக்க அறிவீரோ? சாற்றீர் சாற்றீர் என்றென்று கேட்டாள. பூவணத்தெம்மானும் தம் ஆகத்துள்ள மின்னை நினைத்துத் தார் கொடுக்க அஞ்சினார். மதனுடைய காய்பொழிந்த வளைய கணைகள் தங்கிக்கிடக்குந் தூணியென்று சொலலுமபடியா கிப் பாவை யென்றாள், பைந்தாரா ... றான்.

பிறிதோரிடத்து, பூவணத்துப் புத்தமுதவாரியாகிய இறைவன் மீது பொன்னனையாள் வைத்த பரிவு அத்தனையும் வைக்கும் அளவினை யுடையாளாகிய பேரிளம் பெண் (32-40; இப்பருவவருணனையை சஉ-ம் கண்ணிதொடக்கம் சசரு-ம்கண்ணிவரையுள்ளபகுதியிற் காண்க) ஒருத்தி மணிமாடத்துள் ஓர் அரியணையிற் பூங்கவரி கால் வீசப் போய் இருந்து, பாங்கரில் உறையும் முற்பருவப் பெண்கட்கு மோகநூலை அவ்வவர் சொற்பருவங் கண்டு கண்டு சொல்லிக்கொண்டிருந்தாள். சொல்லுங்கால், சிலர் பாடங்கேட்க, சிலர் அர்த்தங் கேட்க, சிலர் தம் ஆசங்கைகளைக் கேட்க, அவற்றை அவர்களுக்கெல்லாந் தெளிவித்து ஆசிரியத் தன்மை செலுத்தும் அத்தருணத்தில், அவனசையாமல் அணுவசையா தென்னும் பழமொழிக்குப் புத்தேளும், உவமை தெரிக்குந் தெய்வங்கள் சிகாமணியும், தோன்றி மரிக்குந் தெய்வங்கள தலைவனும் பரிபாலனஞ் செய்கின்ற அயனுக்கும் இந்திரனுக்கும் அழகிய நிறத்தையுடைய தாமரைபோன்ற நயனற்கும் ஏனைத் தேவர்க்கும் நாயகனும், வையை நதித்திரனும், மணிகர்ணிகைத் தீர்த்தனுமாகிய சைவ நிறை புட்பவனத் தம்பிரான்றன் தெய்வமறைபார்ப்பு, அவனி எங்குமதிர, திருத்தேர்ப்பவனி வருதலைச் செய்தனர். பவனி சென்று இளைஞரானவிலைச் செகுத்தனென்னுங் கண்ணார்க்கு உரைசெய்யும் நூலை மறந்து எழுந்தாள். முன்றிலைக் கடந்தாள். திருவீதி கண்டாள், தேர் முன்னே நடந்தாள். சிவனை நயந்தாள். தடந்தேரை ஓடாமை வேண்டி ஒருகோடி தண்டனிட்டாள். நீடு ஆதரங்கூர நின்றாள்.

"—வீடாத
நாமக் கயிலைமலை நாதா புராதன
காமப் பகையையடர் கண்ணாளா-
வாமக்
கவுரி திருக்கணவா கங்கைமணவாளா
பவன கவனவிடைப் பாகா-
உவமையில்பொற்
கச்சேற்ற கொம்மைமுலைக் கன்னியரை வீதியிலே
பிச்சேற்ற வந்த பெருமானே-
மைச்சேல்கண்
பாவணங்(கு) ஓசையயில் பாண்டிப் பழம்பதியாம்
பூவணங் கோயில்கொண்ட
புண்ணியா-மேவநினைந்(து)
ஆனத மாலை யடுத்துமட லேந்தினேன்;
தேனார்வா யூறநின் றுதேங்கினேன்-
ஆனத
வண்டு விழிகண்ணீர் மல்கினேன்;
பொன்பூத்தேன்;
விண்டலர் துற்ற வெளிநின்றேன்-
மண்டி
வரும்ஆர்வத் துற்றேன்; மலர்க்
கொன்றை யானேன்;
திருமார்வத் துற்றணையச் செய்
துன்-அருள்தாராய்"

என்றாள். என்றாளை நோக்கி இடர் நோக்கி, சம்பரனை வென்றானை (சம்பராசுரனைச் சயித்த மன்மதனை) ஈசன் விலக்கினன், அவளும் நின்றாள். இவ்வாறாகப் பேதை முதலாகப் பேரிளம் பெண் ஈறாக மாதர் பலர் மயங்க, மாதேவன்-சோதிப் படர்வார் சடையெம்பான்-என்றும் அடைவார் வினைதீர்க்கும் அம்

(தொடர்ச்சி 6–ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *திருக்கோவையார்

[திரு. பூ. ஆலால சுந்தரச் செட்டியார்]

திருக்கோவையார் என்பது சைவ சமய குரவருள் ஒருவராகிய மாணிக்கவாசக சுவாமிகள் பாடியருளிய ஓர் அரிய நூலாகும். இவர் தண்ணார் தமிழளிக்கும் பாண்டி நாட்டில் ஒருவாத புகழுடைய திருவாதவூரில் அவதரித்தார். தில்லையிலுள்ள எல்லையற்ற பரம்பொருளான நடராஜப் பெருமான், இவர் பாடியருளிய திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் தாமே எழுதிக் கொண்டு பொன்னம்பல வாசற்படியுள் வைத்து மறைந்தார் என்பது இவர் வரலாற்றால் அறியக் கிடக்கின்றது. இதனை, சிவப்பிரகாச சுவாமிகள் "நலமலி வாதவூர் நல்லிசைப் புலவ.........நீ புகழ்க் துரைத்த பழுதில் செய்யுள எழுதினன் அதனால், புகழ்ச்சி விருப்பன் போலும், இகழ்ச்சி அறியா வென்பணி வானே" எனப் பாராட்டி யுள்ளனர். மாணிக்கவாசரது காலம் கி. பி. 3-வது நூற்றாண்டு என்பர். கி. பி. 9-ம் நூற்றாண்டு எனக் கூறுவாரும் உளர்.

திருச்சிற்றம்பலமாகிய சிதம்பரத்தையும் அங்குள்ள ஸ்ரீ நடராஜப் பெருமானையும் சிறப்பாகக் கூறும் இந்நூல திருச்சிற்றம்பலக் கோவையார் என்றும் திருக்கோவையார் என்றும் வழங்கப்பெறும். அகப்பொருள் துறைப்பாடல்களால் கோவை செய்யப்பட்டநூல்கோவையாகும். அகப்பொருள் என்பது உள்ளத்தில் நிகழும் காதலின்பத்தைக் குறிக்கும். இது களவு, கற்பு என இரண்டு பிரிவுகளை யுடையது. சிற்றின்பமே என்றும் நிலையாகவுள்ள பேரின்பமாகிய வீடு பெறுதற்கு வழிகாட்டியாக உள்ளதால் தேவாரம்பாடிய மூவர், மாணிக்கவாசகர், ஆழ்வார்கள்; இராமலிங்க சுவாமிகள் முதலிய பெரியோர்கள் அகத்துறை பாடல் மூலம் இறைவனைப் பாடியுள்ளனர். இவ்வாறு பாடும் முறை "காமப் பகுதி கடவுளும் வரையார், ஏனோர் பாங்கினு மென்மனார் புலவர்" என்ற தொலகாப்பியச் சூத்திரத்தின்படி, புறத்திணையுள் பாடாண்டிணைப் பகுதியாகும். சிலர் இது அகத்திணையுள் பெருந்திணையினபாற்படும் என்பர். தலைவனும் தலைவியும் நிகழ்த்தும் களவு, கற்பு என்னும் ஒழுங்கங்களை விளகக, திருக்கோவையார் 400 பாக்களைக் கொண்டுள்ளது.

இனி, இந்நூலின்கண் வந்துள்ள ஒருசிலகவிகளின் நயத்தினைக்காண்போம். பொதுவாகப் புலவர்கள் பெண்களின்கண்ணின் சிறப்பினைக் கூறும்போது, தாமரை, குவளை, வேல் கயல்மீன் முதலிய பொருள்களை உவமையாகக் கூறுவது முண்டு. ஆனால், மாணிக்கவாசகர் இங்குக் கூறும் உவமை தனிப்பட்டதாகும். தலைவன் ஒருவன் தன் தலைவியின் கண்களின் அழகினைத் தோழிக்கு எடுத்துக் கூறுகின்றான். 'தோழி! என்னுடைய தலைவியின் கண்கள் சிவபெருமானிடத்து யான் வைத்த அன்பு போல் அகன்று அவன் நீங்கிய என் பாசம் போலக் கறுத்து, அவனது தில்லையின் ஒளியை ஒத்து, அவன் தோள்களிற் பூசும் அத்திருநீறு போல வெளுத்து, அவன் திருவடிகளை யான் பேசும திருவார்த்தை போல மிகவும் நெடியவாய் இருக்கும் என்றான். அச் செய்யுளை நோக்குவோம்.

"ஈசற்கு யானவைத்த அன்பி
னகன்றவன் வாங்கியவென்
பாசத்தின் காரென்ற வன்தில்லை
யின்னொளி போன்றவன் தோள்
பூசத் திருநீ றெனவெளுத்
தாங்கவன் பூங்கழல்யாம்
பேசத் திருவார்த்தை யிற்பெரு
நீளம் பெருங்கண்களே" (109)

இப்பாட்டில் வந்துள்ள பக்திச் சுவையினைக் கண்டு இன்புறுக. பக்திச்சுவை நனிசொட்டச் சொட்டப் பாடிய கவிவலராகிய சேக்கிழார் சுவாமிகள், சிவபெருமானின் திருமேனியிலுள்ள திருநீற்றின் ஒளி போன்று விளங்கியது, சந்திரன் என்ற கருத்தோடு, "அண்ணல் வெண்ணீற்றின் பேரொளி போன்றது நீள்நிலா" எனக் கூறியுள்ளனர். இருள் தோன்றியது என்று கூறும்போது, "பரன்அஞ் செழுத்தும் உணரா அறிவிலார் நெஞ்சம் என்ன இருண்டது நீண்டவான்" என்றார். எனவே, இறைவனிடத்தில இறவாத இன்ப அன்புடைய அடியார்கள் எப்பொருள் பற்றிப் பேசினும் இறைவன் குணத்தினையே அப்பொருளுக்கு உவமையாகக் கொள்வர் என்பது பெறப்படுகின்றது.

தலைவன் மணந்து கொள்ளாமையால தலைவிகொண்ட வருத்தத்தை, தோழி அவனிடம் கூறி, தலைவியை அவனுடைய ஊருக்கு உடன் அழைத்துச் செல்லுதல நலம் எனக் கூறுகின்றாள். அதனைக் கேட்ட தலைவன், "தோழி! எனது ஊர் வெகு தூரத்தில் உள்ளது. இடையிலுள்ள வெம்மையான காட்டில நடந்தால தலைவியின் மலர்போன்ற பாதங்கள் சூடு பொறுக்க மாட்டாது கன்றிப் போய்விடும்" என்ற கருத்துடன், "............மெல்லடிப்பூக், கல்லியல வெம்மைக் கடம்கடுந்தீ.......எல்லை சேய்த்துளம் அகல் நகரே" (திருக்கோவையார், செய்யுள் 201) என, உடனே தோழி, 'தலைவி உன்னுடன் சென்றால் அவளுக்குவெம்மையான காடும் குளம் போன்று குளிர்ந்து விளங்கும்' என்னும் கருத்தோடு, "........முரம்பு நிரம்பிய அத்தமும் ஐய! மெய்யே............தில்லைத் தண்பூம் பணையும் உடமும் அன்றே நின்னோடு ஏகின் என் பைந்தொடிக்கே" (202) என்றாள். திருக்கோவையாரி லுள்ள இது போன்றபல கருத்துக்கள் சங்க நூல்களில் விளங்கக் காணலாம். "காட்டில் உடன் வருதல் தலைவிக்குத் துன்பம் தரும் என்பீராகில் உன்னைப் பிரிந்து அவள் தனியே வீட்டில் இருத்தல் தலைவிக்கு இன்பம் தருமோ" என்ற தோழியின் கூற்றாக வந்துள்ள கீழ்க்காணும் குறுந்தொகைச் செய்யுள் ஈண்டு நோக்கத் தக்கது.

"பெருங்காடு இன்னா என்பிராயின் இனியவோ பெரும தமியோர்க்கு மனையே" சீதாபிராட்டி இராமபிரானுடன் காட்டிற்குப் போதற்குச் சித்தமாய் இருந்ததைக் கண்ட இராமர் காட்டின் வெம்மையைப் பிராட்டியாருக்கு எடுத்துக் கூற, அம்மையார் மிகவும் வருந்தி, "நின் பிரிவினும் சுடுமோ பெருங் காடு என்றாள்" எனக் கம்பர் கூறுவதைக் காண்க.

தலைவிக்கும் தலைவனுக்குமுள்ள ஒற்றுமை தோழியின் வாயிலாக இந்நூலில் வெகு அழகாக விளக்கப் பட்டுள்ளது. "இருவருக்கும் இன்ப துன்பங்கள் பொதுவாக வரும். காக்கையின் இரண்டு கண்களுக்கும் மணி ஒன்றே கலந்தாற் போல இருவர் யாக்கையுள் ஓர் உயிரை யான் இன்று கண்டேன்" (செய்யுள் 71) என்றாள் தோழி. தலைவன் தன் காதலியைக் [illegible]

(தொடர்ச்சி [illegible])

* 26-3-43 இல் அகில இந்தியவானொலியின் சென்னை நிலையத்தில் பேசியது

# கந்தபுராணக் கவிநயம்

சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை

(1) விள்ளுறு நாணினர் விரகத் தீயினர்
உள்ளுறு முயிர்ப்பின ருலையு நெஞ்சினர்
தள்ளுறு தம்முணர் வின்றிச் சாம்பினர்
கள்ளினு முளதுகொல் கருத்த ளிப்பதே.

பளிக்கறை யன்னதோர் படிசர்ப் பாங்கினுந்
தளிர்ப்புறு செறுவினுந் தவறற் றேகுவார்
தெளிப்பவ ரின்மையினெறியிற் சென்றிலர்
களிப்பவர் தமக்குமோர் கதியுண் டாகுமோ.

இவ்விரண்டு செய்யுட்களாலும் கள்ளுண்பதால் வரும் தீங்கை ஆசிரியர் நயம்படத் தெரிவிக்கின்றார்.

(3) மையுறு கணிகையர் மகிழ்நர் வந்துழிப்
பொய்யுறு மளியெனப் பயனில் புன்கதிர்
கையுறு முவகையாற் பணியுங் கற்பினோர்
மெய்யுறு பரிவென விளைந்து சாய்ந்தவே.

பொருட் பெண்டிரின் பொய்மை முயக்கத்தை உள்ளீடில்லாத சாவிக்கதிர்களுக்கு ஒப்பிடுகின்றார் ஆசிரியர்.

(4) பிறப்பதும் வளர்வதும் பின்னர் மூப்புவந்
திறப்பதும் வைகலு முலகி லேய்ந்தெனச்
சிறப்புடன டுவதும் பருவஞ் செய்வதும்
அறுப்பதுந் தொகுப்பது முலப் பின் றுயவே.

ஆன்மாக்கள் பிறந்திறந்துழல்வன என்பதை உவமான முகத்தாற் காட்டுகின்றனர் ஆசிரியர். சிவபெருமான் பிறப்பிறப்பில்லாதவர் என்பதை முன்னரே பின்வருஞ் செய்யுளால் ஆசிரியர் விளக்கியுள்ளார். —

பிறப்பது மிறப்பதும் பெயருஞ் செய்கையும்
மறப்பது நினைப்பதும் வடிவம் யாவையுந்
துறப்பது மின்மையும் பிறவுஞ் சூழ்கலாச்
சிறப்புடையானடி சென்னி சேர்த்துவாம்

(5) எறுகாட்டியதிற லினைஞ ரெந்திரங்
கூறுகாட் டியகழை யழுங்கக் கோறலுஞ்
சாறுகாட் டியதரோ யாதுந் தம்மிடை
யூறுகாட் டினர்க்கலாலுலோ பரீவரோ.

கரும்பை ஆலையிலிட்டு ஆட்டினாற்றான் அதனிடத்துள்ள சாற்றைப் பெறலாம். அஃதேபோல் உலோபிகள் தமக்குத் துன்பஞ் செய்வார்க்கன்றி ஏனையோர்க்குத் தமது பொருள்களைத் தரமாட்டார் என்றபடி.

(6) சித்திரக் கதலிமா வருக்கை தீங்கனி
துய்த்திட வரும்பய னுதவுந் தோற்றத்தான்
உத்தம முதலிய குணத்தி னோங்கிய
முத்திறத் தவர்கொடைமொழிய நின்றவே

வாழை மா பலா வாகிய முக்கனியை முதலிடை கடை வள்ளல்களுக்கு உவமித்திருக்கும் அழகு வியக்கற்பாலது.

[illegible]த்தை உண்போர் [illegible]மின்றி அதன் தோலை மாத்திரம் உரித்தவுடன் வாயிலிடுதல் சாலுமாதலின் அக்கனியை, குறிப்பறிந்து ஈயும் முதல்வள்ளலுக்கும், மாங்கனியையுண்ண விரும்புவோர் கத்தி முதலிய கருவி கொண்டு சிறிது சிரமப்பட்டுத் தோல் விதை யென்னுமிவற்றை நீக்கியுண்ணவேண்டுதலின் அக்கனியை யாசகன் சிறிது சிரமத்தோடு இரந்தபின் ஈயும் இடையாய வள்ளலுக்கும், பலாப்பழத்தை அரிவாள் முதலிய பெரிய கருவி கொண்டு வெட்டி முள்ளோடுகூடிய தோல், நரம்பு, விதை முதலியவைகளை ஒன்றொன்றாகப் பெருஞ்சிரமப்பட்டு அகற்றிச் சுளையையெடுத்து உண்பதுபோல, இரப்போன் பலமுறை சென்று பல இரப்புகளைச் சொல்லி இரந்து சிரமப்பட்ட பின்னரே ஏதும் பொருளைப் பெற முடியுமாதலின் அவ்வருக்கைக் கனியைக்கடையாய வள்ளலுக்கும் ஆசாரிய சுவாமிகள் ஒப்பிட்டமை காண்க.

(7) பாட்டிய லளிமுரல் பதுமக் கோயிலில்
நாட்டிய நிமலன்மு னந்தி நீரிடை
மாட்டிய பல்பெருஞ் சுடரை மானுமாற்
கோட்டியர் தடந்தொறுங் குவளை பூத்தவே

தடாகங்களிற் செங்குவளை மலர்கள் பூத்திருக்கும் காட்சியை நமிநந்தியடிகளாரநீரால் விளக்கெரித்தமைக்கு ஒப்பிடுவது ஆசிரியரின் சிவபக்தியைக் காட்டுகின்றது.

(8) கண்டு கேட்டவை யுண்டுயிர்த் துற்றறி கருவி
கொண்ட வைம்புல னொருங்குற நடாத்திய கொள்கைத்
தொண்டர் கூட்டமும் விழிவழிப் புனலுகத் தொழுங்கை
அண்டர் கூட்டமு மாலயந் தொறுந்தொறு மறவால்

(9) வானோக்கி நிற்கு முலகென்னவு மன்னவ செங்
கோனோக்கி நிற்குங் குடியெனவுங் கோதிலும்பர்
ஆனோக்கு நாகருலகோர்க்கு மவனியோர்க்கும்
ஏனோர்க்கு நாடு நகராகி யிருந்த தவ்வூர்

இவ்விரண்டு பாடல்களும் பின்வரும் திருக்குறட் பாக்களைப் பின்பற்றியவை —

(1) கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்
ஒண்டொடி கண்ணேயுள (புணர்ச்சி மகிழ்தல்)

(2) வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன்
கோனோக்கி வாழுங்குடி (செங்கோன்மை)

(10) அறு சமயத்திற் கடந்த சைவத்தினன்றி வீடிலதெனத் தெளிந்து
பிறரறியாது தொன்மைபோ லிருந்து பிஞ்ஞகன்மீது கன்மலரலால்
எறிதரு தோன்பர் தங் கலிங்க மெழிலி கணனைத் தலுஞ்சிரத்தை
முறைபுரி சிலைமேல் மோதினோர் முதலோர் முத்திபெற்றுடையதாம் மூதூர்

சாக்கியர் திருக்குறிப்புத்தொண்டர் முதலிய திருத்தொண்டர்களின் சரித்திரத்தைச் சூசிப்பித்துள்ளார் ஆசிரியர். சைவத்தினன்றி முத்தி சித்திக்காது என்னும் சாத்திரவுண்மையையும் கூறியவாறும்.

(11) காலமுங் கருமமுங் கடந்த தோர் பொருள்

தொடர்ச்சி 4-ம பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோவையார்

3-ம் பக்கத் தொடர்ச்சி

னைத் தன் உயிர் என்றே குறிப்பிடல் "மயிற்சூலம் கண்டதுண்டேல் அது என்னுடைய மன்னுயிரே" (36) என்றும், "மாயத்ததாகி இதோ வந்து நின்றது என் மன்னுயிரே" (39) என்று கூறியதாலும் விளங்குகின்றது.

தலைவி, தலைவனுடன் சென்றுள் என்பதைத் தோழியின் மூலம் அறிந்த செவிலித்தாய் மிகவும் வருந்தித் தலைவியை மீட்கும் பொருட்டு அவர்கள் சென்றவழியே சென்று எதிரே வந்தவர்களை நோக்கி 'ஐயன்மீர்! என் மகள் ஒருத்தியும் பிற மகன் ஒருவனும் இவ்வழியே போகக் கண்டதுண்டோ' என வினவுகின்றுள். அதற்கு அவர்கள், 'அம்மையே! சந்தனமும முத்தும் சங்கு தாம் பிறந்த இடங்களுக்கு யாதும் பயன்படாமல், தம்மை விரும்பி அணிபவருக்கே பயன்படும். அதுபோல உன் மகளும் உம்மிடத்துப் பிறந்தாளாயினும் அவள் தலைவன் ஒருவனையே தன் நாயகனைக் கருதி, கற்பு நெறிப்பட்டுஅவன் பின் சென்றுள். இது உலக இயற்கை. நீ, அவள் பிரிவின் நிமித்தம் கவலை கொள்ள வேண்டாம்!' என்றனர்.

"சுரும்பிவர் சந்துந் தொடுகடல்
முத்தும் வெண்சங்கு மெங்கும்
விரும்பினர் பாற்சென்று
மெய்க்கணி யாம்வியன் கங்கை
யென்னும
பெரும்புனல் சூடும்பிரான்
சிவன்சிற்றம் பலமனைய
கரும்பன்ன மென்மொழி யாரும்
அங்கீர்மையர் காணுநர்க்கே'; (248)

கலித்தொகையில் பாலைக்கலி எட்டாம் செய்யுளின் கருத்தினையே மேலே காட்டிய செய்யுள் வலியுறுத்துகின்றது.

"பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்
கல்லதை
மலையுளே பிறப்பினு மலைக்கவைதா
மென்செய்யு
நினையுங்கா னும்மக ளுமக்குமாங்
கனையளே
சீர்கெழு வெண்முத்த மணிபவர்க்
கல்லதை
நீருளே பிறப்பினு நீர்க்கவைதா
மென்செய்யுந்
தேருங்கா னும்மக ளுமக்குமாங்
கனையளே'' பாலைக்கலி-8

மாணிக்கவாசகனர் இயற்கையன்னையின் எழில் நலத்தைக் கண்டு இன்புற்றவர் என்பதற்கு இந்நூலில் பல உதாரணங்கள் உள்ளன. மயிலின் முட்டையினைப் பாதுகாப்பவர் இல்லாமையால் குரங்கின் குட்டி அம்முட்டையினை எடுத்துப் பந்தாடி விளையாடும் பெரிய சோலைகள் நிறைந்த காட்டிற்குத் தலைவன் என காயகனைப் பற்றித் தலைவி தோழியிடம் கூறுகின்றுள். இவ்வாறு வெளித் தோற்றத்திற்கு இயற்கையில் நடக்கும் நிகழ்ச்சியினை எடுத்துக் கூறினுளேனும் தலைவியின் வார்த்தையில் சில குறிப்புப் பொருளாகிய உள்ளுறை உவமம் காணக்கிடக்கின்றது. இனி அச்செய்யுளை நோக்குவாம.

"வந்தாய் பவரையில் லாமயில்
முட்டை இளையமந்தி
பந்தா டிரும்பொழில் பல்வரை
நாடன்பண் போஇனிதே'' (276)

மேலே காட்டிய இயற்கை அழகு குறுந்தொகைச் செய்யுள் ஒன்றில் காணக்கிடக்கின்றது.

"கானமஞ்ஞை யறையின் முட்டை
வெயிலாடு முசுவின் குருளை
யுருட்டுங்
குன்றநாடன்.........''

—குறுந்தொகை-38

இயற்கை அழகில் ஈடுபட்ட வாதவூரர் இந்நூலின் பிறிதோர் இடத்தில் ,'மல்லிகைப் போதின் வெண்சஙகம வண்டூத'' என்றுர், இதில் வண்டினைச் சங்கு ஊதுவோனுகவும் மல்லிகைப் பூவினை வெண்சங்காகவும் கூறிய உவமை கண்டு இன்புறுதற்குரியதாகும்.

தலைவன் தனக்கு மணம் முடிந்தபின் சிறிது காலம் கழித்து கல்வி, போர், பொருள் ஈட்டல, பரத்தையைச் சேர்தல முதலியவை காரணமாகத் தலைவியைப் பிரிதல் உண்டு. பரத்தையினிடம் சென்று மீண்டும் தலைவியிடம் வந்த தலைமகன் ஒருவன் அவளை நோக்கி "யான் நின்னைப் பிரிந்திருந்த காலததில் உன்னைத் தவிர வேறு ஒருத்தியையும் அறியேன்'' எனப் பொய் புகன்றுன். அதைக்கேட்ட தலைவி "நின் பொய்யை யான் அறிவேன், நீ என்னைப் பிரிந்து சென்றிருந்த காலத்தில் ஒருநாள் தெருவில தேர் உருட்டி விளையாடிக்கொண்டிருந்த நம் புதலவனை நின் பரத்தை கண்டு நின மகன் என ஐயமகொண்டு தழுவ, யான் அதைக் கண்டு 'அம்மா நீ ஐயுறவேண்டாம் அவன் ஒரு முறையில் உனக்கும் மகனே, உன உறவும் மெய்யாகிய உறவே; இதுவும் உனது இல்லமே; இங்கே வருவாயாக' என்று கூற அதுகேட்ட அப்பரத்தை நாணிப்போயினுள். நீ என்னைப் பிரிந்தபின் வேறு ஒருத்தியையும் காணவிலலை எனப் பொய் புகலவேண்டாம்'' எனக் கூறி தலைவி ஊடல் சொண்டனள என்ற கருத்துடைய செய்யுளை நோக்குவோம்.

"ஐயுற வாய்நம் அகன்கடைக் கண்டு
வண் தேருருட்டும்
மையுறு வாட்கண் மழவைத் தழு
வமற் றுன்மகனே
மெய்யுற வாம்இதுன் இல்லே
வருகென வெள்கிச் செவறுள்
கையுறு மான்மறி யோன்புலி
யூரன்ன காரிகையே'' (399)

இச்செய்யுளில் வந்துள்ள தலைவியின் பேச்சுத் திறமையும் ஊடல் நுணுக்கமும் கண்டு இன்புறுதற்குரியது. இச்செய்யுள் 'பரத்தையர் சேரியினின்று வந்த தலைமகன் 'யாரையும் அறியேன்' என்றுனுக்குத் தலைமகள் சொலலியது' என்ற துறையுள் வந்துள்ள "நாயுடை முதுநீர்'' எனத் தொடங்கும் அகநானூற்றுச் செய்யுளை ஒத்துள்ளது. காதலனுக்கும் காதலிக்கும் உண்டாகும ஊடல மிகவும் நுணுக்கமானது என்பது சங்கச் செய்யுள்களான் அறியலாம்.

இனி அக்காலப் பழக்க வழக்கங்களையும் இந்நூலில் வந்துள்ள ஒரு சில பழமொழிகளையும் நோக்குவாம். ஆடவர் வீரக்கழல் அணிந்து வெள்ளாடை உடுப்பதும் பெண்கள் சிலம்பணிந்து செம்பட்டு உடுத்துவதும் அக்கால வழக்கமாகும். மடலூரும் தலைவன் தலைவியின் உருவத்தினை எழுதி முன்னே வைத்துக்கொள்வதினின்று பண்டைக் காலத் தமிழ் மக்கள் ஓவியம் எழுதும் ஆற்றல் பெற்றிருந்தனர் என்பது பெறப்படுகின்றது. தலைவன் போர் நிமித்தம் தலைவியைப்பிரிந்து அவளது இன்பத்தினின்றும் போர் சிறந்ததாகக் கருதுவதால் பண்டைத தமிழ்மக்களின் வீரம் புலனுகின்றது. கொல்லன்சேரியில் ஊசி விற்றல், முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படுதல், பேயுடன் பழகினும் பிரிதல்அரிது என்பனபோன்ற பழமொழிகள் இந்நூலில் வந்துள்ளன.

"ஊசி கொற்சேரியில் விற்று''
"கொடுங் குன்றின் நீள்குடுமி
மேற்றேன் விரும்பு
முடவனைப்போல மெலியு நெஞ்சே''
"பேய்வரினும் அரிதாகும் பிரிவு''
"முனிவரும் மன்னரும் முன்னுவ
பொன்னுன் முடியும்''

மாணிக்கவாசகர் பாடியருளிய திருக்கோவையாரிலும் திருவாசகத்திலும் சொல்லும் பொருளும் பல இடங்களில் ஒத்திருத்தல் காணலாம். சிவபெருமான் கடினமான கல்லாகிய மேருமலையையும் கனியும்படி செய்து திரிபுரம் எரித்தகாலத்தில் அம்மலையை வில்லாக வளைத்தார். 'கல்லைக் கனியும்படி செய்த வித்தினைக் கற்றவராதலின் எனது மனமாகிய கலலும் இளகும்படி செய்து அதனின்றும் அன்பு எனக்குத் தோன்றும்படி செய்து பின்னர் என்னை அடிமையாகக் கொண்டார்' என்ற கருதது திருவாசகத்தில்,

"கல்லை மென்கனி யாக்கும் விச்சை
கொண்டு
என்னை நின்கழற்கு அன்பனுக்கி
னுய்'' திருச்சதகம்-94
"கல்நார் உரித்து என்னை யாண்டு
கொண்டான் கழலிணைகள
பொன்னுன வாபாடிப் பூவல்லி
கொய்யாமோ''
—திருப்பூவல்லி-9

என்றும் கூறப்பட்டுள்ளது. இதே கருத்து திருக்கோவையாரில,

"தெவ்வரை மெய்யெரி காய்சிலை
யாணடு எனனையாண்டு கொண்ட
செவ்வரை மேனியன் சிற்றம்பல
வன்'' (114)

என வருதல் காண்க.

திருக்கோவையாரின் சிறப்பினை உணர்ந்த ஒளவையாராகிய அருந்தமிழ் மூதாட்டியார்,

"தேவர் குறளுந் திருநான் மறை
முடியும்
மூவர் தமிழு முனிமொழியுங்—
கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவாசகமென் றுணர்''

எனப் பாராட்டியுள்ளனர்.

இலக்கணக்கொத்து ஆசிரியராய சுவாமிநாத தேசிகரும்,

"பல்காற் பழகினுந் தெரியா
வுளவேல்
தொல்காப் பியந்திரு வள்ளுவர்
கோவையார்
மூன்றினு முழங்கும்''

என இந்நூலின் சிறப்பைப்பற்றிப் போற்றியுள்ளனர். இத்துணைச் சிறப்புள்ள அகப்பொருள் சிறப்பினையும் பக்திச் சுவையினையும் தரவல்ல இச்சீரிய நூலினைத் தமிழ் நலம் சுவைக்கும் தமிழ் அறிஞர் போற்றிப் படித்துப் பயன்பெறுமாறு எல்லாம் வல்ல இறைவர் அருள் புரிவாராக.

—சித்தாந்தம்.

## கொழும்புத் தமிழ்க் கழகம்

சென்ற (12-9-43) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 5-30 மணியளவில் கொழும்புத் தமிழ்க் கழகத் தமிழிசை இயக்க ஆதரவில் ஸ்ரீ ஆர். மூர்த்தி ஐயர் புல்லாங்குழற் கச்சேரி நடத்தினுர். பக்கவாத்தியமாக திரு ஆர். முத்துச்சாமி வயலினும், திரு. என். சின்னத்துரை மிருதங்கமும் வாசித்தனர்,

அனேக தமிழன்பர்கள் கச்சேரிக்கு வந்திருந்தனர். இரண்டரை மணி நேரம கச்சேரி நடந்தது. கச்சேரி உயர்ந்த முறையிலிருந்தது. மிருதங்க வாசிப்பு நன்றுகச் சோபித்தது; முத்துச்சாமி வயலினும் சுமாராயிருந்தது; திரு. வ. மயிலவாகனமும், திரு. சே. க. சண்முகம்பிள்ளையும் கழகத்தின் சார்பாகக் கச்சேரி நடத்தியவர்களுக்கு நன்றி தெரிவித்தனர் என்று மேற்படி கழகக் காரியதரிசி அறிவிக்கின்றுர்.

—கடித.

## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,36700**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Y 164 21-11-41—20-11-43 (தி)

## கந்த புராணக் கவிநயம்

3ம் பக்கத் தொடர்ச்சி

மூலமுண் டோவென
மொழிகின் றூர்சிலர்
மேலுமுண் டோசில விளம்ப
விஞ்சையின்
பாலுற முணர்ச்சியே
பரமென் பார்சிலர்

சிவபெருமான் காலாதீதர் என்னுஞ் சித்தாந்த சாத்திரக் கருத்தை காட்டியவாறும்,

(12) ஆற்றுறபுனல்படிந்தழுக்கு
நீக்கலார்
சேற்றிடை வீழ்ந்தென
மறைகள் செப்பிய
நீற்றொடு கண்டிகை நீக்கி
வன்மையால்
வீற்றுரு குறிகொடு மேவு
வார்சிலர்

விபூதி உருத்திராக்க தாரணத்தின் அவசியத்தைக் கூறியதாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதோஷ விரத மான்மியம்

(ம. வே. தி. ச.)

(முற்றொடர்)

இவ்வாறான சமயத்தில் வாயுவின் புதல்வரும் சிரஞ்சீவியும் பேராற்றலுடையவருமாகிய அநுமார் அங்கே வந்தார்; வந்த அநுமாரைச் சந்திரசேனன் கண்டு வணங்கித் தோத்திரஞ் செய்து "கவிக்குல வேந்தே! நீர் இச்சமயத்தில் இவ்விடத்திற்கு எழுந்தருளியது நாம் செய்த பூர்வ புண்ணியப்பயனேயாகும்" என்று இதமான மொழிகூறிநிற்றலும், அவர் அவனுக்கு அருள் புரிந்து, பக்கலிலே நின்ற சிவபத்தியிற் சிறந்த ஆயர்குலச் சிறுவனைக் கட்டித்தழுவி மார்போடு அணைத்து, அங்கு நின்ற அரசனையும் ஏனையோரையும் அருளுடன் நோக்கி "அரசர்களே, இச்சிறுவன் செய்த பூசனைக்குத் திருவுளமிரங்கிச் சிவபிரான காட்சிகொடுத்தருளியதை நீவிரெல்லீரும் அறிவீர்; இந்த அருள் நிகழ்ச்சிகளுக்கெல்லாம் காரணம் இந்த நாட்டு வேந்தனாகிய இச் சந்திரசேனன் அநுட்டித்த சனிவாரப் பிரதோஷத்தின் மகத்துவமும் சிவபூசைத் திறனுமேயாகுமென அறிவீர்களாக; இப்பிரதோஷகாலப் பூசையைத் தரிசிப்போர் பெறும் பயன் இவ்வளவினதென்று சொல்லுதல் இயலாது; இந்த இடையர்குலச் சிறுவனும் அன்றொருநாள் சந்திரசேன மன்னன் சனிப்பிரதோஷ புண்ணிய தினத்திலே செய்த சிவார்ச்சனையைத் தரிசித்தமையினால் இப்பொழுது மேம்பாடுற்றான்; இவனுடைய எட்டாம்வழித் தோன்றலாக நந்தகோபன் என்னும் நாமத்துடன் இடையர்குலத் தலைவனொருவன பிறப்பான்; அவனே கண்ணபிரானைத் தனபிள்ளையாகப் போற்றி வளர்க்கும் பாக்கியத்தைப் பெறுவான். அந்தக்கிருஷ்ணமூர்த்தியால் இடையர் குலமும் இந்த உலகமும் நன்மையடையும்; இன்று தொடக்கமாக இச்சிறுவனுக்குச் ஸ்ரீதரன் எனப்பெயரிட்டு வழங்குதிர்" எனக் கூறி அவ்விடம் விட்டகன்றார்.

பின்னர்ச் சந்திரசேனன் தன்னுடன் பகைத்துப் போர் செய்யும்படி வந்து பின்னர் நட்புப் பூண்டவர்களாகிய வேற்றுநாட்டரசர்களெல்லார்க்கும் இதைக் கூறி அவர்கட்கு வேண்டிய சன்மானஞ் செய்து அவர்களைத் தத்தம் நாடுகட்குச் செல்ல விடைகொடுத்து விடுத்து, ஸ்ரீதரன் என்னுஞ் சிவபத்தியிற் சிறந்த ஆயர்குலச் சிறுவனுடன் இருந்து நீடித்தகாலம் இராச்சிய பரிபாலனஞ் செய்து அவனுடன் சிவகதியடைந்தான். நைமிசவன முனிவர்களே, இந்தப் பிரதோஷ விரதத்தின் மகத்துவத்தை நான் அறிந்தவரையில் உங்களுக்குச் சொன்னேன்; சிவ விரதத்துட் சிறந்ததாகிய இப்பிரதோஷ விரதத்தை நீவிர் விதிப்படி பத்தி பூர்வமாக அநுட்டிப்பீர்களாக என்று சூதமகா முனிவர் நைமிசவன முனிவர்கட்குக் கூறியருளினார்.

"கண்ணுதலாலய நோக்குங்
கண்களே கண்கள்,
கறைக்கண்டன் கோயில்புகுங்
கால்களே கால்கள்
பெண்ணொரு பாகனைப் பணியுந்
தலைகளே தலைகள்
பிஞ்ஞகனைப் பூசிக்குங் கைகளே
கைகள்
பண்ணவன்றன் சீர்பாடும் நன்னாவே
நன்னா
பரன் சரிதையே கேட்கப்படுஞ்
செவியே செவிகள்,
அண்ணல் பொலங் கழல் நினைக்கும்
நெஞ்சமே நெஞ்சம்
அவனடிக் கீழ் அடிமைபுகும்
அடிமையே அடிமை"

## ஸ்தல ஸ்தாபன ஊழல்களை ஒழிக்க

### மந்திரியின் வேண்டுகோள்

பட்டினசபைச் சிப்பந்திகள் மகாநாடு வெள்ளிக்கிழமை காலை தொழிற்பயிற்சிக் கல்லூரியில் ஸ்தல ஸ்தாபன மந்திரி மிஸ்டர். எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகாவால் திறந்து வைக்கப்பட்டது. அப்பொழுது கனம் மந்திரி பேசுகையில் ஸ்தல ஸ்தாபனங்களுடன் தொடர்புள்ள அனைவரும் ஸ்தல ஸ்தாபனங்களிலுள்ள ஊழல்களை ஒழிக்கும்படி ஓர் வேண்டுகோள் விடுத்தார். நேர்மையே மிகச் சிறந்த கொள்கையென்பதையும் முறைதவறான காரியங்களைச் செய்பவர் ஒருபோதும் தப்பித்துக் கொள்ள முடியாதென்பதையும் மிஸ்டர். பண்டாரநாயகா வற்புறுத்தினார்.

ஸ்தல ஸ்தாபனக் கொமிஷனர் மிஸ்டர். ஈ. டபிள்யூ. கன்னங்கரா தலைமை வகித்தார். இக்கூட்டத்துக்குச் சில பகுதித் தலைவர்களும் பட்டினசபைத் தலைவர்களும் மற்றும் பல பிரமுகர்களும் வந்திருந்தனர். மிஸ்டர். கன்னங்கரா மகாநாட்டுப் பிரதிநிதிகளையும் மந்திரியையும் அதிதிகளையும் வரவேற்றார். ஸ்தல ஸ்தாபனக் கமிஷனர் மிஸ்டர் கன்னங்கரா அப்போது பேசியதாவது:—

"இச்சமயம் ஜனநாயகத்தின் சோதனை காலமாகும். இலங்கையில் பல கஷ்டங்களும் பிரச்னைகளுமுள. சில சமயங்களில உண்மையான சுயாட்சி எப்படிப்பட்டதாகவிருக்கவேண்டுமென்பது சரிவர உணரப்படுவதில்லை. நீங்களும் நானும் ஸ்தல ஸ்தாபனத்தின் சககாரங்களாகும். இந்த ஸ்தாபனத்தை ஒழுங்காக நடத்துவது நமது கடமையாகும்".

பினனர் மிஸ்டர். பண்டாரநாயகா பேசியதாவது:—

"சட்ட அமைப்புக்கும சட்ட நிர்வாகத்துக்கும் இடையேயுள்ள தொடர்பை ஒழுங்குபடச் செய்வதே நமது முதலாவது பிரச்னையாகும். அடுத்தபடியாக ஊழல்களை ஒழித்தே தீரவேண்டும். மூன்றாவதாக எஜமான் ஊழியர் என்ற முறையில ஜனநாயகத் தலைவரின் பொறுப்புகளை உணர்ந்துகொள்ள வேண்டும்.

## கரவெட்டி வெற்றித் தொண்டர் சங்கம்

### முதலாம்வருட விழா

கரவெட்டி வெற்றித் தொண்டர் சங்கத்தின் முதலாம் வருடவிழா சென்ற வெள்ளிக்கிழமை (10-9-43) இரண்டாயிரம் சனங்களின் சமுகத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தகவல் இலாகாப் பகுதியின் பிரதிநிதி கனம் J. C. W. ரொக் அவர்கள் சாயந்தரம் 5 மணிக்குக் கரவெட்டிச்சந்தியில் வந்ததும் சங்கத்தின் காரியதரிசி திரு. சி. மகேசன் அவர்கள் அவரை வரவேற்க முதலியார் க. சின்னத்தம்பி அவர்கள் அவருக்கு மாலையிட்டார். சந்தியிலிருந்து கனம். ரொக் அவர்களை அலங்கரிக்கப்பட்ட மோட்டார் இரதத்தில் சனங்கள் அழைத்துச் சென்றார்கள். சங்க மண்டபத்தில் கனம் ரொக் அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் ஓர் பகிரங்கக்கூட்டம் நடைபெற்றது. முதலியார் சின்னத்தம்பி, திரு. சோ. நடராசா, திரு. P. நடேசன் முதலியோர் யுத்தத்தைப் பற்றிய விஷயங்கள் பேசினர். இறுதில் அக்கிராசனர் அவர்கள் கரவெட்டி வெற்றித்தொண்டர் சங்கத்தின் பெருமை வாய்ந்த சேவையைப் பற்றியும், பொதுவாக வெற்றித் தொண்டர் சங்கங்கள் செய்யவேண்டிய கடமைகளைப்பற்றியும் பேசினார்கள். கூட்டம் 7 மணியளவில் முடிவுற்றது. இதன்பின் நாலாயிரம் சனங்கள் வயலில் சண்டைப் படக்காட்சியைப் பார்வையுற்று தங்கள் இல்லங்களுக்குச் சென்றனர்.

—கடித

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத் தட்டு)

### செவ்வாய் செப் 21

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 தந்தி இசை 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 எஸ் அனந்த கிருஷ்ணன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 வி. என். கிருஷ்ண மூர்த்தி வீணை 2 தமிழில் செய்திகள் 2-05கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 வி. என். கிருஷ்ண மூர்த்தி வீணை 5-45 இசைப்பயிற்சி 6 நச்சுப் பொய்கை 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 நாமும் யுத்தமும் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 புதிய வெளியீடுகள் † 8 மதராஸில் உள்ளபடி 9-15 திருவெண்காடு சுப்பிரமணியபிள்ளை † 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 தில்ருபா 10-00 இசை வேளை † †10-30 முடிவு.

### புதன் செப் 22

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 திருச்சி வாத்ய கோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 கே. ஆர். பார்த்தசாரதி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கே ஆர் பார்த்தசாரதி 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 சேத்தூர் சுந்தரேச பட்டர் வயலின் 5-45 இசைப்பயிற்சி 6 அம்பூர் அம்ருதவல்லி சுந்தரவல்லி பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 ரேடியோ போட்டி 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 ஸைராக்யூஸ் கனவு 8 சேத்தூர் சுந்தரேசபட்டர் 8-30அமெரிக்க வாத்து 8-45 அம்பூர் அம்ருதவல்லி சுந்தரவல்லி பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்துசெய்திகள் 9-45 புல்லாங்குழல் 10 இசை வேளை † 10-30 முடிவு.

### வியாழன் செப் 23

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 பக்த அருணகிரி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 அரியக்குடி டி. ராகவ ஐயங்கார் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 வாளாடி எம். ருக்மிணி புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 வாளாடி எம் ருக்மணி புல்லாங்குழல் 5-45 இசைப்பயிற்சி 6 அரியக்குடி டி. ராகவ ஐயங்கார் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 செய்தி விளக்கம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 மன்னார்குடி ராஜகோபால் பிள்ளை பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்துசெய்திகள் 9-45 இன்றைய சினு 10 இசை வேளை †10-30 முடிவு.

## இன்ன இன்ன மலடிகளென்பதும் பிறவும்

பிரமஸ்ரீ ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள்
சுதுமலை

சென்மமலடி, காமமலடி, கன்னிகாமலடி சூதிகாமலடி, மிருதமலடி என ஐவகைப்படுவர். ஒருகாலும் பிள்ளைப் பெறாதவள் சென்ம மலடி, கனவு கண்டு கருப் பஞ்சிதையப் பெறுமவள்காமமலடி; பெற்ற ஆண்பிள்ளைகள் இறந்துபோகப் பெண்பிள்ளைக ளெல்லாம் இருக்கப்பெறுபவள் கன்னிகாமலடி, மூன்று நாழிகை மூன்று நாள் மூன்று மாதம் மூன்று வருஷம் என்னு மிவைகளுள் ஒன்றிலே கருப்பம் நசிக்கப் பெறுமவள் சூதிகாமலடி, பிறந்த பிள்ளைக ளெல்லாஞ் சாவக் கொடுப்பவள் மிருதமலடி.

வயிற்றில் மூன்றுமடிப்பும் விழுந்து இடுப்பும் பருத்துச் சரீரமும் பெருத்திருந்தால இவர் தேவப் பெண்களாயிருந்தாலும், கருப்பந் தரிக்க மாட்டாது. முதன்முதல் இரண்டு பிள்ளைகளைப் பெற்றுப் பின் கருப்பமில்லா திருப்பது காக மலடாம். வாழையிலுண்டாகும் தாறுபோல ஒரு பிள்ளையைப் பெற்றுப் பின் கருப்ப மில்லா திருப்பது கதலிமலடாம்.

வயிற்றிலேயே செத்துச் செத்துப் பிறக்கும் பிள்ளையைச் சாதாரணமாக வருஷந்தோறும் பெறுவது கருப்பமலடாம். இவைகளுக்குச் சேதுஸ்நானஞ் செய்து கருமசாந்தியுடன் நாகப்பிரதிஷ்டையுஞ் செய்து உரிய வைத்தியத்தையுஞ் செய்தால் பூரணகருப்ப முண்டாம்.

வயிற்றில் உருவம் ஏற்படாத இளங் கருவா யிருக்கும்போது; விலா, கீழ்வயிறு பிஷ்டம் ஆகிய இவ்விடங்களில் அதிக வேதனையும், மார்புநோவும், மூக்கெலும்புப்பும், கொப்பூழின்கீழ் உபத்திரவமும், ஆயாசமும், வயிற்றில் வாளால் அறுப்பது போல் இருத்தலும் உண்டானால், கருப்பங் கரைந்து விழுமென நிதானித்து ஏற்ற வைத்தியஞ் செய்யவும்.

## அறிவித்தல்

1943-ம் ஆண்டு செப்ரெம்பர்மாசம் 30-ந் தேதிக்குப் பின்னர் சகல 5 சத நோட்டுகளும் சட்டப்படி செல்ல மாட்டா.

இத் திகதிக்குப்பின்னர் இந்தநோட்டுகளையும் (2சதம் 3சதம் பெறுமதியான பாகங்களாகப் பிரிக்கப்பட்ட இந்த நோட்டுகளின் பாகங்களையும்) வைத்திருப்போர் கொழும்பு பொதுத் திறைசேரியில்தான் மாற்ற முடியும்.

இந்த நோட்டுகளை வைத்திருப்போர் இவைகளை 1943-ம் ஆண்டு செப்ரெம்பர்௴ 30-ந் தேதிக்கு முன்னர் வங்கிகளில் போடவேண்டும், அல்லது கச்சேரிகளில் மாற்றிக்கொள்ளவேண்டும்.

மாற்றிக் கொள்வதற்குக் கொடுக்கப்படும் நோட்டுகள் அதிகமாக வில்லாவிட்டால் 1943-ம்ஆண்டு செப்ரெம்பர்மாசம் 30-ந் தேதி வரைக்கும் தபாற்கந்தோர்களிலும் புகையிரத ஸ்தானங்களிலும் இந்த நோட்டுகளை மாற்றிக்கொள்ளலாம்.

எச். ஜே. ஹக்சாம்,
தலைவர், நாணயக்கொமிஷனர் சபை.
செக்கிறற்றேறியற்,
கொழும்பு.

(G. 22. 16-8 & 20-9 & 23-9-43)


## பல் வைத்தியம்

### யாழ்ப்பாணம்

பல் வைத்தியம் செய்யவும் கண் பரிசோதனை செய்யவும் தத்துவம்பெற்றவரான திரு. எஸ். சாள்ஸ் பத்திருஜ அவர்கள் வருஷத்தின் எல்லா மாசங்களிலும் 3-ந் திகதி தொடக்கம் 15-ந் திகதிவரையும் யாழ்ப்பாணம், பெரிய தெரு 43ம் இலக்கத்திலுள்ள வைத்திய சாலையில் கருமம் நடாத்துவார்.

### குருநாகல் கிளைஸ்தாபனம்

மாசத்தின் 20ந் திகதியிலிருந்து 30-ந் திகதி வரையும் குருநாகல் கோட்டுவீட்டுக்கு முன்னுள்ள பல்வைத்திய கிளை ஸ்தாபனத்தில் கருமம் நடாத்துவார்,

யாழ்ப்பாணத்தில் அவரிடம் வைத்தியம் செய்விப்போர் முன் ஒழுங்குகள் செய்யவேண்டில் அவருடைய குருநாகல் விலாசத்துக்கு எழுதுதல் நல்லது,

(Mis. 98. 5.8—31.12.43)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CEYLON WAR SAVINGS MOVEMENT

# அகில இலங்கை

# யுத்தசேமிப்புவாரம்

**43 அக்டோபர் 23-ந் தேதி முதல் 30-ந் தேதி வரை.**

## இலக்கு

ரூபா.

## 10,000,000

**இந்த இலக்கை எய்துவதற்கு**

**நீங்கள் தாராளமாக**

**யுத்த கடன் பத்திரங்களுக்கும் சேமப்பத்திரங்களுக்கும்**

**கொடுத்து உதவுங்கள்.**

**சேமப்பத்திரங்களைத் தபாற்கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்.**

விபரங்களுக்குக் கீழ்க்கண்டவருக்கு விண்ணப்பித்துக்கொள்க:

**யுத்த சேமிப்பு இயக்க கொமிஷனர்**

**தபால் பெட்டி 541, கொழும்பு.**

(Mis. 116 A20.9-43)

## வட இலங்கைக் கீழைத் தேசச் சங்கீத சபை

வட இலங்கைக் கீழைத்தேச சங்கீத சபையாரின் வருடாந்த பொதுக்கூட்டம் இம்மாதம் 17ந் திகதி வெள்ளிக்கிழமை செந். ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

வட பெரும்பாக வித்தியாதரிசி திரு. V. K. நாதன் தலைமை வகித்தார்.

காரியதரிசியாகிய திரு. W. M. குமாரசுவாமி வருடாந்த அறிக்கை வாசித்தார். தனதிகாரி திரு. S. F. X. அண்ணுசாமிப்பிள்ளை கணக்கு விபரங்களைப் படித்தார். கீழ்க்காணும் பேர்வழிகள் புதுவருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர் திரு. V. K. நாதன், உபதலைவர்கள்: ரெவரண்ட் எமானியானுஸ்பிள்ளை, ரெவரண்ட் T. T. அருளானந்தன், முதலியார் S. கந்தையா காரியதரிசி திரு. S. J. குணசேகரம், தனதிகாரி, திரு. E. J. ஜயராஜா.

உத்தியோகஸ்தர் தெரிவின்பின், திரு. V. K. நாதன் தேசிய பாடல்களையும் நடனத்தையும் வளர்க்க வேண்டிய அவசியத்தைப்பற்றிப் பேசினர். அவர் கூறியவற்றின் சாரம் வருமாறு:- ஒவ்வொரு வீட்டிலுமுள்ள ஒவ்வொரு குழந்தையும் பாடவும் சுதேச சங்கீதத்தை நயக்கவுங் கூடியதான ஒரு காலம் விரைவில வருமென்று நான் எதிர்பார்க்கிறேன். வீட்டைச் சந்தோஷகரமானதாகவும் பிரகாசமுடையதாகவுஞ் செய்வதற்குச் சங்கீதத்திலும் பார்க்கச் சிறந்த பொருளில்லை. சீனதேச சங்கீதத்தில வருடந்தோறும் பரீக்ஷைகளை நடத்தி, திரினிற்றிக் கல்லூரிச் சங்கீதப் பகுதியார் கொடுப்பதுபோன்ற தாரதாரப்பத்திரங்களைக் கொடுக்க ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.”

இதன்பின், சங்கீத பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியர்களும் மாணவர்களும் சேர்ந்து நடத்திய சங்கீத கதம்பக் கச்சேரியொன்று நடைபெற்றது.

## அறிவித்தல்

குழந்தைகளுக்குக் காத்திராப்பிரகாரம் உண்டாகும் மாந்தம், இருமல், கிரந்தி காய்ச்சல் ஆகிய நோய்களைத் தணிக்கும் ஒப்புயர்வற்ற மருந்துகள் எம்மிடம் ஏராளமாயுண்டு.

குளிர்சுரம் (மலேரியா) இருமல், உஷ்ணச்சூடு, வாதம், கிரந்தி, நரம்புப் பெலவீனம், மலடு ஆகிய நோய்களைத் தீர்க்கும் கீழ்க்கண்ட மருந்துகள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

அயக்குழம்பு, சென்னகரம்பழநெய், காந்தபஸ்பம் வெள்ளறுகுப்பஸ்பம், அமுதசர்க்கரை, கிரந்திக்குளிகை, பெருங்கிரந்தி எண்ணெய், கோட்டைச்சந்தனாதி எண்ணெய், மகாசஞ்சீவி மாத்திரை, கோரோசனை மாத்திரை, அயசெந்தூரம்.

சில்லாலைமுத்துவைத்தியசாலை, 160, மேல்வீடு, பெரியதெரு, யாழ்ப்பாணம்.

வைத்தியர்: அ. செபஸ்தியாம்பிள்ளை.

(Q. 30. 11-5.43—10-11.43)

## விதவைகள் அநாதர்கள் பென்ஷன் நிதி

விதவைகள் அநாதர்கள் பென்ஷன் நிதிக்கு 1642-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ந் தேதி ரூ. 12952456 சதம் சேமித்திருப்பதாகக் குறித்த திட்ட டைரெக்டர்களின் அறிக்கை கூறுகிறது. 1942-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ந் தேதிவரை செலவாகிய மொத்தத் தொகை ரூ. 60138 ஆகும்.

## புதிய சேர்வெயர் ஜெனறல்

டெபுடி சேர்வெயர் ஜெனறல் மிஸ்றர். ஆர். ஜெ. ஜோன்ஸ்டன் சேர்வேயர் ஜெனறல் மிஸ்றர். ஐ. எப் வில்சன் டெபுடி சேர்வெயர் ஜெனரலாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இந்நியமனங்கள் இவ்வருடம ஏப்ரல மாதம் முதல் திகதியிலிருந்து நடைக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதாக வியாழக்கிழமையன்று வெளிவந்த கஸெற்றில பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

## ரூஸ்வெல்டுக்கு இரகசியச் செய்தி

வாஷிங்டன் செப் 16 — சீன அந்நியநாட்டு மந்திரி டாக்டர் டி. வி. சூங் இன்று வெள்ளை மாளிகையில் ஜனுதிபதி ரூஸ்வெல்டைப் பேட்டிகண்டு அவரிடம் ஜெனறல் சியாங்கை ஷேக்கின் இரகசியச் செய்தியைச் சமர்ப்பித்தனர்.

## திருப்பூவணநாதருலா

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மான்-எங்கள் திருப்பூவணக் காசியூருடையான் - உலாப்போந்தான் என்பது.

இன்னும் இவ்வுலாவின் கண்ணே வரும் பழமொழிகள் முதலியவை படித்தின்புறத்தக்கன. உவமைகளும் நயம்வாய்ந்தவை. அவற்றை விரிக்கிற் பெருகும்.

சுபம். முற்றிற்று.

குறைந்த விலையில் **துணிகள்**

ஷேட்துணிகள், துவாய்கள் பஞ்சாலும் பட்டாலும் ஆகிய சேலைகள் முதலியவை.

**R. S. M. டெக்ஸ்டைல் ஸ்ரோர்ஸ்**

மொத்தத்துக்கும் சில்லறைக்கும் விற்கும் வியாபாரிகள்

பெரியகடை—யாழ்ப்பாணம்.

K. A. இரத்தினசிங்கம்,
பங்காளர்.

Y 19. 4-3-42——3-3-44

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabbai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday 20, September, 1943

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org